# இறைத்தூதன்
## கத்தோலிக்க வார இதழ்


“இயேசு நின்று, “அவரைக் கூப்பிடுங்கள்” என்று கூறினார். அவர்கள் பார்வையற்ற அவரைக் கூப்பிட்டு, “துணிவுடன் எழுந்து வாரும், இயேசு உம்மைக் கூப்பிடுகிறார்” என்றார்கள். அவரும் தம் மேலுடையை எறிந்துவிட்டு, குதித்தெழுந்து இயேசுவிடம் வந்தார். இயேசு அவரைப் பார்த்து, “உமக்கு நான் என்ன செய்ய வேண்டும் என விரும்புகிறீர்?” என்று கேட்டார். பார்வையற்றவர் அவரிடம், “ரபூனி, நான் மீண்டும் பார்வை பெற வேண்டும்” என்றார். இயேசு அவரிடம், “நீர் போகலாம்; உமது நம்பிக்கை உம்மை நலமாக்கிற்று” என்றார். உடனே அவர் மீண்டும் பார்வை பெற்று, அவரைப் பின்பற்றி அவருடன் வழி நடந்தார். (மாற்கு 10:49-52)

# திருஅவையில் மூன்று பொதுநிலையினர் உட்பட 14 பேர் புதிய புனிதர்கள் ஆனார்கள்

**வத்திக்கான்:** அக்டோபர் 20 ஞாயிற்றுக் கிழமை வத்திக்கான் தூய பேதுரு பெருங்கோவில் வளாகத்தில் ஓர் அருள்பணியாளர். 8 ஆண் துறவறத்தார், 2 அருள்சகோதரிகள் உட்பட மூன்று பொதுநிலையினர் என மொத்தம் 14 பேர் புனிதர்களாக உயர்த்தப்பட்ட கூட்டுத் திருப்பலியானது கொண்டாடப்பட்டது. வழக்கமாக, உலக மறைபரப்பு ஞாயிறு புதிய அருளாளர்களைப் புனிதர்களாக அறிவிக்கும் ஒரு பிரபலமான நாளாகும்.

### அருளாளர் Manuel Ruiz Lopez, அவரது 7 உடன்சகோதரர்கள் மற்றும் 3 பொதுநிலையினர், 3 அருட்சகோதரிகள்

1860 ஆம் ஆண்டுகளில் லெபனோன் முதல் சிரியா வரை கிறிஸ்தவர்களுக்கு ஏற்பட்ட வேதகலாபனைகளில் மறைசாட்சிகளாக இந்த 11 பேரும் தங்களது வாழ்வைக் கிறிஸ்துவிற்காகவும் கிறிஸ்தவத்திற்காகவும் கொடுத்தவர்கள். 1860 ஆம் ஆண்டு ஜூலை 9 அன்று தாமஸ்க்கு பகுதியில் இருந்த 3800 வீடுகள் Shiite Druze என்னும் குழுவினரால் தாக்குதலுக்கு உள்ளாகின. அன்று இரவு நடந்த கொடிய தாக்கு தல்களில் பிரான்சிஸ்கன் சபையாரின் தூய பவுல் இல்லம் குறிவைத்து தாக்கப்பட்டது. மூடப்பட்ட கதவுகளைத் துளைத்துக் கொண்டு சென்ற வன்முறையாளர்கள், அத்துறவற இல்லத்தில் இருந்த ஸ்பானிய நாட்டைச்சார்ந்த ஏழு துறவறத்தார், ஆஸ்திரியாவைச் சார்ந்த ஒருவர், மாரனைட் வழிபாட்டுமுறைக் கிறிஸ்தவர்களான பொதுநிலையினர் மூவர் என 11 பேரை கொலைசெய்தனர். கிறிஸ்தவத்தை விட்டு இஸ்லாம் மதத்தைத் தழுவும்படிக் கட்டாயப்படுத்தப்பட்ட இம்மறைசாட்சிகள் 11 பேரும் அதற்கு இணங்காததால் மறைசாட்சிகளாக மரித்தனர்.




கடந்த அக்டோபர் 20 ஆம் தேதி புனித பேதுரு சதுக்கத்தில் நடந்த ஒரு சிறப்புத் திருப்பலியில், 19 ஆம் நூற்றாண்டு துறவற சபைகளை நிறுவிய மூன்று பேரையும், "தாமஸ்கு மறைசாட்சகள்" 11 பேரையும் கத்தோலிக்க திருஅவையால் போற்றப்படும் புனிதர்களாக திருத்தந்தை பிரான்சிஸ் அறிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

### மறைசாட்சிகளாக தாமாஸ்குவில் உயிர்த்துறந்தவர்கள்:

1. இம்மானுவேல் ரூய்ஸ் லோபஸ்
2. கார்மெலோ போல்டா பானுல்ஸ்,
3. ஏங்கல்பெர்ட் கொலண்ட்,
4. நிக்கானோர் அஸ்கானியோ சோரியா,
5. Nicolás Mar'a Alberca Torres,
6. Pedro Nolasco Soler Méndez,
7. பிரான்சிஸ்கோ பினாசோ பெனால்வர்
8. ஜுவான் ஜேக்கப் பெர்னாண்டஸ் மற்றும்

**பொதுநிலைநினர் (சிரியாவில் புனித பவுல் ஆலயத்தில் கொல்லப்ட்டவர்கள்)**

9. பிரான்சிஸ் மசாப்கி
10. மூட்டி மசாப்கி,
11. ரபேல்
12. அருள்பணியாளர் கிசெபெபே அல்லமனோ
13. அருளாளர் அருள்சகோதரி மேரி-லியோனி
14. அருளாளர் அருள்சகோதரி ஏலெனா குவெர்ரா

புனிதர்களின் வாழ்க்கைக் குறிப்பானது வாசிக்கப்பட்டதைத் தொடர்ந்து புனிதர் களின் பரிந்துரையைக் கேட்கும் மன்றாட்டு இடம்பெற்றது. அதன் பின் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இந்த 14 அருளாளர் களையும் புனிதர்களாக அறிவித்தார். மக்கள் அனைவரும் இணைந்து வானவர் கீதத்தை மகிழ்வுடன் பாடிய பின்னர் கர்தினல் செமராரோ திருத்தந்தைக்கு நன்றி கூறினார். அதன்பின் புனிதர்கள் 14 பேரின் புனிதப்பொருள்களுக்கு இடும் தூபப் பொருட்களை அப்புனிதர்களின் சபையை சார்ந்தவர்கள் பீடத்திற்கு பவனியாக எடுத்து வந்து அன்னை மரியா திருஉருவ சுரூபத்தின் முன் வைத்தனர்.

அடுத்துத் திருப்பலி தொடர்ந்து கொண் டாடப்பட்டது. கன்னி மரியாவைப் போலவும், புனிதர்களைப் போலவும், நற்செய்தியின் துணிவான மற்றும் மகிழ்ச்சியான சாட்சிகளாக இருக்க முயல் வோம் என்று கூறிய திருத்தந்தை கூடியிருந்த திருப்பயணிகளுக்கு தன் அப்போஸ்தலிக்க ஆசீரை வழங்கினார். இறுதிப்பாடலுடன் கூட்டுத் திருப்பலியானது நிறைவிற்கு வந்தது. திருநற்கருணை வழிபாட்டைத் தொடர்ந்து திருப்பலியின் நிறைவில் கூடியிருந்த மக்களுக்கு மூவேளை செப உரையை வழங்கினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

# குவந்தான், புனித தோமா பங்கில் மனநலப் பட்டறை

கோலாலம்பூர் உயர்மறைமாவட்ட மனநல பணிக்குழு(AMHM), இங்குள்ள திருத் தூதரான புனித தோமா பங்கில் பங்கு மக்களின் நலன் கருதி, மனநலன் குறித்த பயிலரங்கை சமீபத்தில் நடத்தியது. இந்த நிகழ்வில் ஆங்கிலம் மற்றும் சீன மொழிக் குழுக்களைச் சேர்ந்த 60 ஆர்வமுள்ள பங்கேற்பாளர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வு AMHM இன் உதவியாளர் அருள்பணி பிஃலிப் சுவா அவர்களின் தலைமையில் காலை 9 மணிக்குத் தொடங்கியது, அவர் மனநல விழிப்புணர்வு மற்றும் நமது சமூகங்கள், உறவுகள் மற்றும் அன்றாட வாழ்க்கைக்கான அதன் நன்மை களின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

பயிலரங்கம் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது, “மன நலனைப் புரிந்து கொள்வது” மற்றும் “மன ஆரோக்கியத்தில் நெகிழ்ச்சியை உருவாக்குதல்.” முதல் பிரிவு, பங்கேற்பாளர்களுக்கு மன ஆரோக்கியத்தின் அடிப்படைக் கருத்துகளை அறிமுகப்படுத் துவதில் கவனம் செலுத்தியது, அதன் வரையறை, உடல் ஆரோக்கியத்துடன் ஒப்பிடுதல், மனநல கோளாறுகள் பற்றிய



கண்ணோட்டம். மற்றும் மனநலம் பற்றிய கருத்தாக்கத்திற்கான உயிரியல்-சமூக-ஆன்மீக மாதிரியானது, இந்த ஆரம்ப அமர்வில் பெறப்பட்ட அறிவு, மனநலம் பற்றிய பங்கேற்பாளர்களின் புரிதலுக்கு ஒரு முக்கிய அடித்தளமாக செயல்பட்டது.

இரண்டாவது தலைப்பு மன மற்றும் உணர்ச்சி பின்னடைவை மேம்படுத்து வதற்கான திறன்களை வளர்ப்பதில் கவனம் செலுத்தியது. மன உளைச்சல் உருவாக் குவதற்கான நுட்பங்கள், அறிவாற்றல் மிகு நடத்தை வழி குணமளிப்பின் அடிப் படையாக இருந்தன. கூடுதலாக, பங்கேற் பாளர்கள் தங்கள் உணர்ச்சி ரீதியான பின்னடைவை வலுப்படுத்த உதவுவதற்காக உணர்ச்சி கட்டுப்பாடு மற்றும் சுய-கவனிப்புக்கான திறன்கள் அறிமுகப்படுத் தப்பட்டன.

AMHM நேருக்கு நேர் மற்றும் ஆன்லைன் ஆலோசனை மற்றும் சிகிச்சை சேவைகளை வழங்குகிறது. உதவி தேடுபவர்கள் SeekCounsel.ArchKL.org இல் பதிவு செய்ய ஊக்குவிக்கப்படுகிறார்கள் அல்லது 017-358 6188 அல்லது 017-915 6188 என்ற எண்ணில் WhatsApp மூலம் தொடர்புகொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டது. இறுதியாக, இந்நிகழ்வுக்கு ஏற்பாடு செய்த பங்குத்தந்தை



*அருள்பணி பிஃலிப் சுவா அவர்களுடன் பங்கேற்பாளர்கள்*

அருள்பணி ஜோர்ஜ் பாக்கியசாமி அவர் களுக்கும் பங்கு மனநலப் பணிக்குழுவிற்கும் நன்றி நவிலப்பட்டது.

# சிகாமாட், புனித பிலிப்பு பங்கில் மருத்துவ முகாம் நடைபெற்றது

சிகாமாட்: கடந்த அக்டோபர் 13, 2024, ஞாயிற்றுக்கிழமை காலை, சிகாமாட், ஜோகூரில் உள்ள புனித பிலிப்பு பங்கு வளாகத்தில் பங்கு திருச்சபை மக்களும் பல் பரிசோதனை, நீரிழிவு, இரத்த அழுத்தம், கொழுப்பு, பிஎம்ஐ, நுரையீரல் செயல்பாடு ஆகியவற்றிற்கான பொது சுகாதார பரிசோதனைகளும்




அலுவலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட 'மருத்துவ முகாமில்' பங்கு மக்களும் சிகாமாட் சமூகத்தைச் சேர்ந்தவர்களும் கலந்துகொண்டனர்.

பங்கின் மனித வளர்ச்சி பணிக்குழுவின் தலைவரான திரு. ஜேம்ஸ் பால் ராஜ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், ஆலய நூற்றாண்டு விழாக் குழுவின் தலைவர் திரு லூயிஸ் வின்சென்ட் மற்றும் செயற்குழுவினர் சிகாமாட் மாவட்டத்தைச் சேர்ந்த மலேசிய சுகாதார அமைச்சின், மருத்துவ மற்றும் சுகாதார நிபுணர்கள் குழுவை ஒருங்கிணைத்து, இலவச சுகாதார பரிசோதனை மற்றும் இரத்ததானம் வழங்க ஏற்பாடு செய்யபட்டது.

இந்நிகழ்வல் பங்கு மக்களும் உள்ளூர்

கூடுதலாக, மார்பகப் புற்று பரிசோதனை மற்றும் பிற தொடர்புடைய சிக்கல்கள் பற்றிய ஆலோசனையும் அன்று வழங்கப் பட்டது.

அன்று இரத்ததான நிகழ்வும் ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் ஏறக்குறைய 70 பேர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத் தக்கது. இவர்களுல் ஒரு குறிப்பிடத்தக்க இரத்த தானம் செய்தவர் இப்பங்கின் இளம் அருள்பணி அட்ரியன் பிரான்சிஸ் அவர்களும் அடங்குவார்

பங்குத்தந்தை அருள்ணி போல் வோங் அவர்கள் மருத்துவ முகாமின் வெற்றியில் மிகவும் மகிழ்ச்சியடைந்ததாகத் தெரிவிக்கப் பட்டது.

-ரிச்சர்ட் ஜோசப்

# ஜோகூர் பங்குகளில் 'குடும்ப வாழ்வு' பணிக்குழு ஏற்பாட்டில் தொடர் பயற்சிகள்

கூலாய், ஜொகூர்: கடந்த அக்போடர் 7ஆம் தேதி முதல் 15ஆம் தேதி வரை மலாக்கா ஜோகூர் மறைமாவட்ட தமிழ் குடும்பவாழ்வு பணிக்குழு, இறைவார்த்தையில் குடும்ப குணமளிப்பு என்ற தலைப்பில் நிகழ்வை ஏற்பாடு செய்தி விவிலியத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தும். நோக்கத்தோடு ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்ச்சிக்கு அந்தந்த பங்குத் தந்தையர் நல்ல ஆதரவை வழங்கினர். அநேக மக்கள் கலந்துக் கொள்ளும் வகையில் அருங்கொடை



ருந்தது. ஆயர் பெனட் போல் அவர்களின் அனுமதியோடு பத்து பங்குகளில் இந்நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது.

தமிழ் நாட்டிலிருந்து வரவழைக்கப்பட்ட சகோ. ஜோஸ்லின் மரியா இந்நிகழ்ச்சிகளை வழிநடத்தினார். கோலாலம்பூர் மறை மாவட்டத்தை சேர்ந்த சகோதரி கேரன், அவரது வருகைக்கான ஏற்பாடுகள் அனைதிலும் உதவினார்.

பொறுப்பாளர்களும் பெரிதும் உதவினர். இறைமக்களுக்கு பெரிதும் உதவிய ஆயர் அவர்களுக்கும், அருள்பணியாளர்களுக்கும். மற்றும் பங்கு பொறுப்பாளர்களுக்கும் மறைமாவட்ட குடும்பவாழ்வு பணிக்குழு சார்பாக மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒருங்கிணைப்பாளர்,

நிரந்தர திருத்தொண்டர் அருமை தாஸ்

## திருத்தந்தையின் நவம்பர் மாத இறைவேண்டல் கருத்து

## 'குழந்தையை இழந்தவர்களுக்காக'

ஒரு மகன் அல்லது மகளை இழந்து துக்கத்தில் இருக்கும் அனைத்து பெற்றோர்களும், தங்கள் சமூகத்தின் ஆதரவைப் பெறவும், ஆறுதல் தரும் ஆவியாரின் இதய அமைதியைப் பெறவும் மன்றாடுவோமாக.



## அக்டோபர் 24ல் இயேசுவின் திரு இருதயம் குறித்த புதிய சுற்றுமடல்

வத்திக்கான்: மிக ஆழமான சவால்களை எதிர்கொள்ளும் இன்றைய உலகு, இதயமற்றதுபோல் செயல்படும் சூழலில் வெளியிடப்படும் திருத்தந்தையின் சுற்று மடலுக்கு "Dilexit nos" என பெயரிடப் பட்டுள்ளது.

போராலும், சரிநிகரற்ற சமூக-பொருளாதார நிலைகளாலும், கட்டுப் பாடற்ற நுகர்வுக் கலாச்சாரம் மற்றும் தொழில்நுட்பங்களாலும் மனிதனின் இயல்புநிலை அச்சுறுத்தப்பட்டுவரும் இன்றைய காலக்கட்டத்தில் இந்த சுற்றுமடல் வழியாக, மக்கள் தங்கள் கண்ணோட்டத்தை மாற்றவும், முக்கிய அடிப்படைத் தேவையாக இருக்கும் இதயத்தை மீண்டும் கண்டுகொள்ளவும் திருத்தந்தை அழைப்பு விடுக்க உள்ளார்.



1673ஆம் ஆண்டு 26 வயது பிரான்ஸ் நாட்டு அருள்சகோதரி புனித Margaret Mary Alacoqueக்கு இயேசுவின் திருஇதயம் காட்சியளித்து 17 ஆண்டுகள் அக்காட்சி தொடர்ந்ததன் 350ஆம் ஆண்டு நிறைவு கொண்டாடப்பட்டுவரும் இவ்வேளையில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இயேசுவின் தூயஇதயம் குறித்த சுற்றுமடலை வெளியிடுகிறார்.

வத்திக்கான் செய்தி

# பிறர் அன்பில் இறையன்பைக் காண்போம்!

இன்று பொதுக்காலம் 31ஆம் வாரம் ஞாயிறு. இஸ்ரயேல் மக்கள் தங்களுடைய பாலைநிலப் பகுதியின் இறுதிக் கட்டத்தில் யோர்தான் நதியின் கிழக்குக் கரையோரம் இருக்கின்றனர். வாக்களிக்கப்பட்ட நாட்டுக்குள் அவர் நுழைவதற்கு முன் இங்கு மோசே அவர்களுடன் உரையாடுகின்றார். புதிய நாட்டில் அவர்களுடைய வாழ்க்கை முறை எப்படி இருக்க வேண்டும் என்று அறிவுறுத்துகின்றார். அவற்றில் 'செவிகொடு' என்பது முக்கியச் செய்தியாக உள்ளது. எனுவே, வாழ்வின் எல்லாச் சூழல்களிலும் ஒருவர் முதன்மையாகக் கொள்ள வேண்டியது ஆண்டவராகிய கடவுளை அன்பு செய்தல் என்பது முதல் வாசகத்தின் படிப்பினையாக உள்ளது.

இரண்டாம் வாசகத்தில், மற்ற தலைமைக் குருக்கள் அனைவரும் மனிதர்கள் என்பதால் அவர்களுடைய குருத்துவம் அவர்களுடைய வாழ்வோடு முடிந்து விடுகிறது. ஆனால், இயேசு, கடவுள் என்ற நிலையிலும், இறந்து உயிர்பெற்ற நிலையிலும் அவருடைய அருள்பொழிவும் நிரந்தரமானது என்கிறார் பவுல்.

நற்செய்தியில் இயேசுவைச் சந்திக்க வருகின்ற மறைநூல் அறிஞர் பிறரைப் போன்று, இயேசுவைச் சோதிக்கும் நோக்கத்தில் வரவில்லை. மாறாக அவருடைய குழப்பத் திற்குத் தெளிவு காண வருகின்றார். இயேசுவின் காலத்தில் யூதச்சட்டத்தில் 613 கட்டளைகளும் நியமங்களும் விதிமுறைகளும் இருந்தன. இவற்றுள் முதன்மையானவை எவை என்று ஒவ்வொரு ரபியும் அல்லது ஒவ்வொரு பள்ளியும் ஒவ்வொரு நிலையில் கற்பித்தது. மேலும், ஒரு பள்ளி சார்ந்தவர்கள் மற்ற பள்ளி சார்ந்தவர்களோடு வாதாடவும் விவாதிக்கவும் செய்தனர்.

இயேசு தன் விடையை மிக எளிதாக முன்வைக்கின்றார். இறையன்பையும், லேவியர் நூல் 19:18-ஐச் சுட்டிக்காட்டி, அடுத்திருப்பவருக்கான அன்பையும் முன் வைத்து இரண்டையும் நினைவூட்டுகிறார். ஆக, அன்பு என்ற சொல் வாழ்வின் முதன்மையை நிர்ணயித்தாலும், இறைவனை அன்பு செய்தல் இன்னும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. இதிலிருந்து புறப்படுவதே பிறரன்பு.

பிறரன்புக்கும் இறையன்புக்கும் நடுவில் இருப்பது 'தன்னன்பு.' 'உன்னை அன்பு செய்வது போல' என்று மொழிகின்றார் இயேசு. இயல்பாகவே நாம் நம்மேல் அன்பும் ஆவலும் காட்டுகின்றோம். எவரும் ஒரு கூரான ஆயுதத்தை எடுத்து தன் கண்களைக் குத்திக்கொள்ள மாட்டார். நமக்கு நாம் என்ன பாதகம் செய்ய விரும்ப மாட்டோமோ அவற்றறைப் பிறருக்குச் செய்யாமல் இருக்க வேண்டும் என்தே இயேசுவின் படிப்பினை. இயேசுவின் படிப்பினையானது பிரதிபலன் எதிர்ப் பாராத பிறரன்பு.

-அர்.கே.

**பொதுக்காலம்-31-ஆம் ஞாயிறு**

| | |
|---|---|
| முதல் வாசகம்: | இ.ச. 6:2-6 |
| திரு.பாடல் | 18:1-2abc,2def-3.46,50 |
| 2-ம் வாசகம் | எபி. 7:23 |
| நற்செய்தி | மாற்கு 12:24-34 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 2 (B)**
**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 2**
**திருப்புகழ் மாலை- வாரம் 3**